பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 10 2024 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நடப்பாண்டில் நாட்டின் பொருளாதாரம் 8 புள்ளி 2 சதவீதம் என்ற விரைவான வளர்ச்சியை அடைந்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பாதுகாப்பு உபகரணங்களுக்கான பொதுத்துறை நிறுவனங்களில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. ஜார்கண்ட் சட்டப்பேரவை இரண்டாம் கட்ட மற்றும் மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

4. காஸா பகுதியில் நிரந்தர சண்டைநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஏற்கத் தயார் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

5. பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ரோஹன் போபன்னா – மேத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நடப்பாண்டில் நாட்டின் பொருளாதாரம் 8 புள்ளி 2 சதவீதம் என்ற விரைவான வளர்ச்சியை அடைந்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்திய வர்த்தக சேவை மற்றும் பட்டய கணக்கு சேவை முடித்த பயிற்சியாளர்கள் மத்தியில் அவர் பேசினார்.

உலக அளவிலான சவால்களை எதிர்கொண்டு இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி பயணித்திருப்பதாக அவர் கூறினார்.

நாட்டில் அதிக வளர்ச்சியை எட்டுவதற்கும், தனிநபர் வருவாயை அதிகரிப்பதற்கும் தனியார் முதலீட்டை ஈர்க்க வேண்டியது அவசியம் என்று குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார்.

உலகளாவிய பொருளாதார சூழல் தேக்க நிலையில் இருந்தபோதிலும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியில் பயிற்சி முடித்த அலுவலர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று குஜராத் மாநிலத்திற்கு செல்கிறார்.

கெவாடியா மாவட்டம் ஏக்தாநகரில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவடைந்த பணிகளை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

சுற்றுலா மேம்பாடு மற்றும் கெவாடியா பகுதிக்கு எளிதில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

பயிற்சி முடித்த சிவில் சர்வீசஸ் அதிகாரிகள் மத்தியிலும் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்பு உபகரணங்களுக்கான பொதுத்துறை நிறுவனங்களில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

ஆயுதப்படைகளை தயார்நிலையில் வைத்திருப்பதில் பாதுகாப்புத்துறையின் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நோக்கிய முயற்சிகளுக்கு இந்த நிறுவனங்கள் அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் உற்பத்தி செய்யப்படும் உபகரணங்கள் தரமானவையாகவும், உரிய நேரத்தில் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கும் வகையிலும் நிறுவனங்களின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் சவுதி அரேபிய தலைநகர் ரியாத் சென்றடைந்தார்.

இந்தியா – சவுதி அரேபியா இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக அவருடைய இந்தப் பயணம் அமைந்துள்ளது.

சவுதி அரேபிய தொழில் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் திரு. **Khalid Al Falih**-ஐ சந்திக்கும் திரு. பியூஷ் கோயல் இருதரப்பு வர்த்தக உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

ரியாதில் உள்ள லுா லுா வணிக வளாகத்தில் தீபாவளி உற்சவத்தை திரு. பியூஷ் கோயல் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் சவுதி அரேபியாவில் வசிக்கும் இந்திய சமுதானத்தினர் பங்கேற்கிறார்கள்.

பொருளாதாரம் மற்றும் முதலீடு தொடர்பான அமைச்சர்கள் கூட்டத்திற்கு சவுதி அரேபிய அமைச்சருடன் இணைந்து திரு. பியூஷ் கோயல் தலைமை வகிக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தொழில் வளர்ச்சி, எரிசக்தி பயன்பாடு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான பங்களிப்பு குறித்து அவர் விரிவாக ஆலோசனை மேற்கொள்ள இருப்பதாக எமது செய்தியார் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டசபையின் முதலாவது கூட்டத்தொடர் துணைநிலை ஆளுநர் உரையுடன் அடுத்த மாதம் 4ஆம் தேதி தொடங்குகிறது.

முன்னதாக சட்டப்பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற உள்ளதாக ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவையின் இடைக்கால தலைவர் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் விரிவாக்கமாக 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு 5 லட்சம் ரூபாய் மருத்துவக் காப்பீடு வழங்கும் திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில் அனைத்து மூத்த குடிமக்களும் வருமான வரம்பின்றி பிரதமரின் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், உயர் சிகிச்சை பெறுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

இதற்கு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாகவும், மகாராஷ்டிர சட்டப்பேரவைக்கு ஒரேகட்டமாகவும் நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

ஜார்கண்ட் மாநிலத்தில் முதற்கட்டமாக நவம்பர் 13ஆம் தேதி 43 தொகுதிகளிலும், இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 38 தொகுதிகளில் நவம்பர் 20ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மகாராஷ்டிராவில் 288 தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற உள்ளது.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நவம்பர் ஒன்றாம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

காஸா பகுதியில் நிரந்தர சண்டைநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஏற்கத் தயார் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்த காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் ராணுவத்தை விலக்கிக்கொள்வது உள்ளிட்ட யோசனைகள் அல்லது சண்டை நிறுத்தத்திற்கான ஒப்பந்தங்கள் ஏற்கப்படும் என்று ஹமாஸ் அமைப்பின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பணயக் கைதிகளை பரஸ்பரம் ஒப்படைத்தல், நிவாரணம் மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தடைகளை விலக்கிக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே எகிப்து அதிபர் திரு. அப்தெல் ஃபதா அல்சிசி, பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கு ஏதுவாக 4 இஸ்ரேல் பணயக் கைதிகளை ஒப்படைக்க ஏதுவாக 2 நாள் சண்டைநிறுத்த யோசனையை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக தோஹா மற்றும் கெய்ரோவில் பலசுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இருந்தாலும் சண்டைநிறுத்தம் தொடர்பாக எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில் பாலஸ்தீன் அகதிகளுக்கான உதவி நடவடிக்கையில் ஐ.நா.வுக்கு தடை விதிக்கும் வகையில் இஸ்ரேல் கொண்டுவந்துள்ள சட்டம் குறித்து அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கர், கோவா, மஹாராஷ்டிரா மாநிலங்களிலும், கொங்கன், மராத்வாடா பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, லட்சத்தீவு, கடலோர மற்றும் தெற்கு உள் கர்நாடக பகுதிகளிலும், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

நவம்பர் ஒன்றாம் தேதி மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும், கோவை, நீலகிரி மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியுள்ள மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பிரான்சில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை ஜெர்மனியின் **Alexander Zverev** – பிரேசிலின் **Marcelo Melo** இணையை 6-4, 7-6 என்ற செட்களில் வீழ்த்தியது.

<<<<>>>>

நியூசிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட தொடரில் இரண்டில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி, 49 புள்ளி 5 ஓவரில் 232 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

233 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய இந்திய மகளிர் அணி, 44 புள்ளி 2 ஓவரில் 236 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 8வது சதத்தை பதிவு செய்து சாதனை படைத்தார்.

<<<<>>>>

மகளிர் ஒருநாள் போட்டிகளுக்கான ஐ.சி.சி. பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியாவின் ஆல்ரவுண்டர் தீப்தி ஷர்மா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் அவர் தரவரிசையில் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் **Sophie Ecclestone** முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

<<<<>>>>

ப்ரோ கபடிப் போட்டியில் நேற்று நடைபெற்ற புனே – பெங்கால் அணிகளுக்கு இடையேயான ஆட்டம், டையில் முடிந்தது. இரு அணிகளும் தலா 32 புள்ளிகள் எடுத்தன.

மற்றொரு ஆட்டத்தில் பெங்களூரு அணி – தில்லி அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – தமிழ்நாடு அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் உத்தரப்பிரதேசம் - ஹரியானா அணிகள் மோதுகின்றன.

**<<<<The End>>>>**